செ.வெ.எண்: 163 நாள்: 04/03/2017

பத்திரிக்கைச் செய்தி

தட்டம்மை - ரூபெல்லா தடுப்பூசி முகாம் - செய்தியாளர் கூட்டம்.

மார்ச் 4 நாகர்கோவில்: தமிழ்நாடு முழுவதும் கடந்த பிப்ரவரி 6 முதல் 28ம் தேதி வரை செயல்படுத்தப்பட்ட தட்டம்மை ரூபெல்லா தடுப்பூசி முகாம் பொதுமக்களின் நலன் கருதி மார்ச் மாதம் 15ம் தேதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. தடுப்பூசியின் முக்கியத்துவம் பற்றிய செய்தியாளர் கூட்டம் மார்ச் 4-ம் தேதி நாகர்கோவில் ஹோட்டல் பயோனியர் பாரடைஸ்-ல் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் யுனிசெப் (Unicef) அமைப்பின் சார்பில் மருத்துவர் ஜெகதீஸ், இந்திய குழந்தைகள் நல மருத்துவர் சங்கம் சார்பில் மருத்துவர் கோபால் சுப்ரமணியன், தீவிர நோய் கண்காணிப்பு மருத்துவ அலுவலர் (WHO) பிரதாப் சந்திரன், கன்னியாகுமரி மருத்துவ கல்லூரி மரு.ராதாகிருஷ்ணன், குழந்தைகள் நல மருத்துவர் மரு சுரேஷ், பேராசிரியர் மரு.அருள்பிரசாத், மாவட்ட நலப்பணிகள் இணை இயக்குநர் மருத்துவர் வசந்தா, மாவட்ட சுகாதாரப்பணிகள் துணை இயக்குநர் (பொ)மரு. செந்தில்குமார், நகர்நல அலுவலர் மரு. வினோத் ராஜா, உதவித்திட்ட மேலாளர் மரு. மகாதேவன்பிள்ளை, மாவட்ட பயிற்சி மருத்துவர் அரவிந்த், மாவட்ட தொற்றா நோய் மருத்துவ அலுவலர் மரு. பின்னி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு தட்டம்மை நோயினால் குழந்தைகளுக்கு Uria குறைபாடு வயிற்றுபோக்கு, நிமோனியா மற்றும் மூளையில் பாதிப்புகள் வர வாய்ப்புள்ளது. ரூபெல்லா காய்ச்சல் என்ற விளையாட்டம்மை நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பிறவி கண்புரை நோய், பிறவியிலேயே காது கேளாமை, பிறவி இருதய கோளாறுகள் போன்ற பிறவி ஊனமான குழந்தைதள் பிறக்க வாய்ப்புள்ளதால், தமிழக அரசால் நடத்தப்படும் தட்டம்மை - ரூபெல்லா தடுப்பூசி முகாமில் போடப்படும் தடுப்பூசியினை 9 மாதம் 15 வயது வரை உள்ள அனைத்து குழந்தைகளும் பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. தட்டம்மை ரூபெல்லா நோயினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைப் பற்றி விரிவாக எடுத்துக் கூறினர். 9 மாதம் முதல் 15 வயது வரை உள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் தட்டம்மை தடுப்பூசி போட்டுக் கொண்டு, எதிர்காலத்தில் பிறவிக்குறைபாடு உள்ள குழந்தை பிறப்பை தடுத்து பாதுகாத்துக் கொள்ளவும், நோயின் காரணமாக ஏற்படும் உயிரிழப்பை தடுத்து பாதுகாத்துக் கொள்ளவும் தட்டம்மை ரூபெல்லா தடுப்பூசியின் முக்கியத்துவம் பற்றி விரிவாக எடுத்துக்கூறினர்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த பிப்ரவரி 6 முதல் நடைபெற்ற தட்டம்மை ரூபெல்லா தடுப்பூசி திட்ட முகாமில் தடுப்பூசி போட்டுக்கொண்ட சுமார் ஒரு லட்சம் குழந்தைகளும் நலமாக உள்ளனர். எந்தவொரு குழந்தைக்கும் பாதிப்போ, பக்க விளைவுகளோ ஏற்படவில்லை. இத்தடுப்பூசி மிகவும் பாதுகாப்பானது.

எனவே, இந்த அரிய வாய்ப்பினைப் பயன்படுத்தி பொதுமக்கள், தமது 9 மாதம் முதல் 15 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு வரும் மார்ச் 15 ம் தேதிக்குள் அனைத்து அரசு மருத்துவமனைகள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், அரசு பள்ளிகள், அங்கன்வாடி மையங்கள் மற்றும் குறிப்பிட்ட தனியார் மருத்துவமனைகளில் ஞாயிறு உட்பட அனைத்து நாட்களிலும் இலவசமாக தட்டம்மை ரூபெல்லா தடுப்பூசி போட்டுக் கொண்டு பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள்,
நாகர்கோவில்.

வெளியீடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
நாகர்கோவில்.

தொடர்புக்கு: திருமதி. சுந்தர வேல்விழி, (உதவி இயக்குநர்), 9442126179